**அம்பலாங்கொட நகர சபை**
**காலி மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2018 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2019 மார்ச் 26 ஆந் திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், அந் நிதிக்கூற்றுக்கள் மீது கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பு அறிக்கை 2019 மே 30 ஆந் திகதியும், விரிவான முகாமைத்துவ அறிக்கை 2019 ஜூன் 14 திகதியும் தலைவருக்கு அனுப்பப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இவ்வறிக்கையில் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை பகுதியில் விவரிக்கப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினை தவிர்த்து அம்பலாங்கொட நகர சபையின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

**(அ) கணக்கீட்டு குறைபாடுகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நிலையான சொத்துக்கள் கணக்கின் மீதி மற்றும் மூலதன செலவீட்டிற்கான அரசிறை பங்களிப்பு கணக்கு மீதியிடையே ரூபா 68,357 வித்தியாசம் ஒன்று காணப்பட்டது. | நிலையான சொத்துக்கள் கணக்குகின் மீதி மூலதன செலவிற்கான அரசிறை பங்களிப்பு மீதியுடன் சமப்பட வேண்டும். | எதிர்காலத்தில் சரி செய்வேன். |
| (ii) | மீளாய்வாண்டு திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு ஊழியர் பிணை வைப்பு முதலீட்டுக் கணக்கின் மீதி ரூபா 71,025 தொகை குறைவாகக் காட்டப்பட்டுள்ளது. | ஊழியர் பிணை வைப்புக் கணக்கு மீதி பிணை வைப்பு முதலீட்டுட்டுக் கணக்குடன் சமப்பட வேண்டும். | எதிர்காலத்தில் சரி செய்வேன். |

| | | | |
|---|---|---|---|
| (iii) | மீளாய்வாண்டின் போது சபைக்குச் சொந்தமான கெடன்தொட முன்பள்ளி முற்றத்தை அபிவிருத்தி செய்வதற்காக செலவிடப்பட்டிருந்த ரூபா 998,775 இற்கான செலவு மற்றும் விளையாட்டு அரங்கிற்காக கொள்வனவு செய்திருந்த ரூபா 373,700 இற்கான விளையாட்டு உபகரணங்களை மூலதனப்படுத்தப்பட்டு இருக்கவில்லை. | குறிப்பிட்ட சொத்துக்களை மூலதனப்படுத்த வேண்டும். | எதிர்காலத்தில் சரி செய்வேன். |
| (iv) | 2005 ஆம் ஆண்டின் போது உள்நாட்டுக் கடன்கள் மற்றும் அபிவிருத்தி நிதியத்தில் இருந்து பெற்றிருந்த ரூபா 6,842,682 கடன்தொகை ரூபா 10,311,361 இற்கான வட்டி மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருக்கவில்லை. | நிதிக்கூற்றுக்களில் கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | எதிர்காலத்தில் சரி செய்வேன். |

**(ஆ) இணக்கஞ் செய்யப்படாத கணக்குகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள கூட்டுத்தொகை ரூபா 52,344,424 தொகைக்கான 18 கணக்கு விடயங்கள் தொடர்பான மீதிகள் மற்றும் அவற்றுடன் தொடர்புடைய துணைப் பதிவேடுகளின் பிரகாரம் காட்டப்பட்டுள்ள மீதிகளின் இடையே ரூபா 13,782,388 இற்கான வித்தியாசம் காணப்பட்டது. | உரிய கணக்கு மீதிகளில் வித்தியாசங்களை இணக்கஞ் செய்து சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | எதிர்காலத்தில் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

**(இ) பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

**(i) பெற வேண்டிய கணக்குகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 20 வருடங்களை விட மிகையான காலம் முன்கொண்டு வந்து காணப்படும் ரூபா 17,092,768 தொகைக்கான 06 கணக்கு மீதிகளை அறவீடு செய்வதற்காக மீளாய்வாண்டின் போதும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | பெற வேண்டிய தொகைகளை அறவீடு செய்வதற் காக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் | தேடிப்பார்த்து சரி செய்வேன். |

**(ii) செலுத்த வேண்டிய கணக்குகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 6 வருடங்கள் முதல் 24 வருடங்கள் காலம் முதல் முன்கொண்டு வந்து காணப்படும் ரூபா 7,588,200 தொகையான செலுத்த வேண்டிய மீதிகள் மற்றும் கடந்த 5 ஆண்டுகள் தொடர்பான ரூபா 2,400,174 இற்கான கணக்காய்வுக் கட்டணத்தை தீர்ப்பதற்கு மீளாய்வாண்டின் போதும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | செலுத்தி வேண்டிய மீதிகளை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | தேடிப்பார்த்து சரி செய்வேன். |

**(இ) கணக்காய்விற்குத் தேவையான எழுத்துமூல சான்றுகள் இன்மை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| தேவையான தகவல்கள் சமர்ப்பிக்கப் படாமையால் கூட்டுத்தொகை ரூபா 85,145,058 தொகைக்கான 10 கணக்கு விடயங்களை திருப்திகரமாக பரிசோதனை மேற்கொள்ள முடியாதிருந்தது. | நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்த கணக்கு மீதிகளை உறுதிப்படுத்தும் சான்றுகள் சமர்ப்பிக்க வேண்டும். | எதிர்காலத்தில் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

**1.4 இணக்கமின்மைகள்**

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணக்கமின்மை**

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் தொடர்பு | பெறுமதி ரூபா. | இணக்கமின்மை | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|---|
| (அ) நகர சபைக் கட்டளைச் சட்டத்தின் (அதிகாரம் 255) பிரிவுகள் 170(1)(2) | - | நிலுவை வீதவரி அறவீடு செய்வதற்காக கட்டளைச் சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | சட்டத்தின் பிரகாரம் நிலுவைத் தொகை அறவீடு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். | வீதவரிக்காக நடமாடும் சேவை நடாத்தி அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை | | | | |
| (i) | நிதிப் பிரமாணம் 371(2)(ஆ) | 275,614 | நிமித்த துணைக் கட்டுநிதிகள் குறிப் பிட்ட விடயம் பூர்த்தி செய்யப்பட்டவுடன் தீர்க்கப்படவேண்டும் எனினும், 2018 ஆம் ஆண்டு ஆரம்பத்தில் பெற்றுக்கொள்ளப் பட்ட முற்பணங்கள் தீர்க்கப்பட்டிருக்க வில்லை. | நிதிப் பிரமாணங் களின் பிரகாரம் முற்பணங்கள் தீர்க்கப்பட வேண்டும். | 2019 ஆண்டில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |
| (ii) | நிதிப் பிரமாணம் 395(ஈ) | -- | சபையின் இரண்டு வங்கி நடைமுறைக் கணக்குகளில் மீளாய்வாண்டிற்கான வங்கி இணக்கக் கூற்றுகள் தயாரித் திருக்கவில்லை. | நிதிப் பிரமாணங் களின் பிரகாரம் வங்கி இணக்கக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட வேண்டும். | வங்கி இணக்கக் கூற்றுக்கள் தயாரிப் பதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

கணக்காய்விற்குச் சமர்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுகளின் பிரகாரம் 2018 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 39,909,490 தொகையாகக் காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 22,496,098 தொகை ஆகக் காணப்பட்டது.

### 2.2 வருமான நிருவாகம்

#### 2.2.1 மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக சமர்ப்பித்திருந்த மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| வருமான மூலம் | 2018 மதிப்பீட்டு வருமானம் | 2018 சிட்டையிடப்பட்ட வருமானம் | 2018 சேகரிக்கப்பட்ட வருமானம் | 2018 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை | 2017 மதிப்பீட்டு வருமானம் | 2017 சிட்டையிடப்பட்ட வருமானம் | 2017 சேகரிக்கப்பட்ட வருமானம | 2017 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை |
|---|---|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீதவரி மற்றும் வரி | 14,525,000 | 20,497,155 | 11,409,382 | 23,681,395 | 9,700,000 | 7,376,943 | 8,359,471 | 14,593,622 |
| வாடகை | 14,197,000 | 9,186,693 | 8,539,491 | 13,182,082 | 9,438,000 | 8,187,806 | 10,434,541 | 12,534,880 |
| அனுமதிப் பத்திரக் கட்டணம் | 252,500 | 1,111,819 | 1,114,819 | 606,507 | 277,000 | 201,300 | 422,498 | 609,507 |
| ஏனைய வருமானங்கள் | 114,777,933 | 95,262,346 | 123,076,312 | 86,163,590 | 128,739,000 | 101,778,935 | 106,019,023 | 113,977,556 |
| | 143,752,433 | 126,058,013 | 144,140,004 | 123,633,574 | 148,154,000 | 117,544,984 | 125,235,533 | 141,715,565 |

### 2.2.2 வருமானம் சேகரித்தல் செயலாற்றல்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் போது மதிப்பிடப்பட்ட மொத்த வருமானம் ரூபா 143,752,433 தொகையாக இருந்ததுடன், சிட்டையிடப்பட்ட வருமானம் ரூபா 126,058,013 தொகையாக இருந்தது. ரூபா 141,715,565 தொகைக்கான ஆரம்ப நிலுவையுடன் அறவிடப்பட வேண்டிய மொத்தத் தொகை ரூபா 267,773,578 தொகை காணப்பட்ட போதிலும், ஆண்டின் போது சேகரிக்கப்பட்ட மொத்த வருமானம் ரூபா 144,140,004 தொகை ஆக இருந்ததால் வருட இறுதியில் உள்ளவாறு ரூபா 123,633,574 தொகையாகும். | வருமானத்தை இனங்காணல் மதிப்பீடு செய்தல், சிட்டையிடல் மற்றும் அறவீடு செய்தல் உரிய முறையில் மேற்கொள்ளப்பட வேண்டும். | எதிர்காலத்தில் சரிசெய்ய நடவடிக்கை எடுப்பேன். |

**2.2.3 வீதவரியும் வரியும்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| ஆண்டின் போது அறவிடப்பட வேண்டிய வரித்தொகை ரூபா 35,090,777 தொகை எனினும், அறவீடுகள் ரூபா 11,409,382 தொகையாகக் காணப்பட்டமையால் வருட இறுதியில் உள்ளவாறு ரூபா 23,681,395 இற்கான நிலுவை மீதி ஒன்று இருந்தது. அறவீடுகளின் முன்னேற்றம் 33 சதவீதம் ஆகிய மிகவும் குறைந்த மட்டத்தில் இருந்தது. | நிலுவை வீதவரி அறவிடப்பட வேண்டும். | எதிர்காலத்தில் சரிசெய்ய நடவடிக்கை எடுப்பேன். |

**2.2.4 வாடகை வருமானம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| ஆண்டின் போது அறவிடப்பட வேண்டிய மொத்த வாடகை வருமானம் ரூபா 21,721,573 தொகையாக காணப்பட்ட துடன், ஆண்டின் போது அறவீடுகள் ரூபா 8,539,491 தொகையாக காணப்பட்டமையால் வருட இறுதியில் உள்ளவாறு ரூபா 13,182,082 தொகை நிலுவை மீதியொன்று காணப்பட்டது. | உடன்படிக்கையின் பிரகாரம் வாடகை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | எதிர்காலத்தில் சரிசெய்ய நடவடிக்கை எடுப்பேன். |

**2.2.5 நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மாகாண சபையின் பிரதான செயலாளரிடம் மற்றும் ஏனைய அதிகாரிகளிடம் மீளாய்வாண்டு திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு நீதிமன்றத் தண்டப் பணம் ரூபா 283,719 தொகை மற்றும் முத்திரைக் கட்டணமாக ரூபா 75,756,932 தொகை பெறவேண்டி இருந்தது. | நிலுவைத் தொகையை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | பிரதான செயலாளரிடம் நிலுவைத் தொகையை பெற்றுக்கொள்ளவதற்காக கடிதம் அனுப்பப் பட்டுள்ளது. |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றுகை

நகர சபை கட்டளைச் சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் மக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டு சேவை மற்றும் பொது பாதைகள் மீதான கருமங்களை முறைப்படுத்தலும் கட்டுப்படுத்துதலும் பொதுமக்களின் சுகபோக வாழ்க்கை, வசதிகள் மற்றும் நலன்புரி ஆகிய சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியிருந்த செய்பணிகளை நிறைவேற்றுவது தொடர்பாக கண்டறியப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

### (அ) செயல் நடவடிக்கைத் திட்டம்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோ கத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | மீளாய்வாண்டிற்காக கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்த செயல் நடவடிக்கைத் திட்டம் சபையினால் ஆக்கப்பட்டிருந்த துணைவிதிகளுக்கு இணங்க தயாரித்திருக்கவில்லை. | துணை விதிகளுக்கு இணங்க செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக் கப்பட வேண்டும். | எதிர்காலத்தில் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுப்பேன். |
| (ii) | 2016-2019 ஆண்டுகளில் பங்குகொள் ளல் நான்கு ஆண்டுத் திட்டத்தின் படி 2018 வருடாந்தத் திட்டத்தில் நகர சபை அதிகாரப் பிரதேசத்தில் அமைந்துள்ள 13 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளுக்காக ரூபா 14,600,000 தொகை பெறுமதி யான 38 நிர்மாண வேலைகள் செயற்படுத்துவதற்காக திட்டமிட்டி ருந்த போதிலும், உடன்படிட்டிருந்த பெறுமதி ரூபா 5,223,213 தொகைக் கான 27 நிர்மாண வேலைகள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. | வருடாந்த திட்டத்தின் படி நிர்மாண வேலைகள் பூர்த்தி செய்யப்பட வேண்டும். | எதிர்காலத்தில் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

### (ஆ) திண்மக் கழிவுப்பொருள் முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோ கத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | 2017 ஏப்ரல் 20 ஆந் திகதிய 2015/53 இலக்க குப்பை முகாமைத்துவ அலுவல்களை முறைப்படுத்துதல் என்ற தலைப்பில் வெளியிடப்பட்டி ருந்த சுற்றறிக்கையின் பிரகாரம் தனியாக குப்பை முகாமைத்துவ அலகு ஒன்று நிறுவப்பட்டிருக்காத துடன், சபையின் அதிகாரப் பிரதேசத்தில் சேகரிக்கப்படும் | குப்பை முகாமைத் துவத்திற்காக முறையான திட்டம் ஒன்று தயாரிக்கப் பட வேண்டும். | எதிர்காலத்தில் திட்டம் தயாரிக்க நடவடிக்கை எடுப்பேன். |

| | | | |
|---|---|---|---|
| | குப்பைகள் ரத்கம மொன்ரோவியா வத்த குப்பை செயற்களத்திற்கும், சபைக்கு உரித்தான ஹல்வதுர என்ற காணியில் போடப்பட்டு பரப்பப்பட்டு மண்போட்டு மூடுதல் மேற்கொள்ளப் படுகின்றது. | | |
| (ii) | 2003 ஆண்டின் போது ரூபா 79,780 தொகை செலவிடப்பட்டு தனியார் கம்பனி ஒன்றினால் கொள்வனவு செய்திருந்த காபனிக் உரம் துண்டாக்கும் இயந்திரம் அந்த நாள் முதல் எதுவித தேவைகளுக்கும் பயன்படுத்தப்படாமல் சபையின் களஞ்சியத்தில் வைக்கப்பட்டிருந்தது. | சொத்துக்களின் மூலம் உச்சமட்ட பயன் பாட்டை பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். | எதிர்காலத்தில் பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

**3.2 மனித வள முகாமைத்துவம்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | பதவியணித் திட்டத்தில் அங்கீகரிக் கப்பட்ட பதவிகளில் காணப்பட்ட 46 வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | பதவியணித் திட்டத்தின் படி வெற்றிடங்களை நிரப்புதல் மேற் கொள்ளப்படல் வேண்டும். | எதிர்காலத்தில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |
| (ஆ) | 2006 ஏப்ரல் 10 ஆந் திகதிய 28 ஆம் இலக்கங் கொண்ட முகாமைத்துவ சேவை சுற்றறிக்கை க்கு இணங்காதவாறு சபையினால் பிரதியீட்டு அடிப்படையில் சேர்க்கப் பட்டிருந்த 46 ஊழியர்களுக்கு மீளாய்வாண்டின் போது ரூபா 2,509,213 தொகை சபை நிதியத்தில் இருந்து செலுத்தப்பட்டிருந்தது. | முகாமைத்துவச் சேவை சுற்றறிக்கைக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | எதிர்காலத்தில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

**(இ) ஊழியர் கடன்**

| | | |
|---|---|---|
| ஓய்வுபெற்ற மற்றும் சேவையை வெறிதாக்கிய 71 ஊழியர்களிடம் அறவிடப்பட வேண்டிய ரூபா 345,545 இற்கான கடன்மீதியை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | குறிப்பிட்ட ஊழியர்களின் பிணையாளர் களிடம் அறவீடு செய்யப்பட வேண்டும். | அறவீடு செய்ய நடவடிக்கை எடுப்பேன். |

## 3.3 சொத்துக்கள் முகாமைத்துவம்

### விளைவற்ற/ குறைபயன்பாட்டுச் சொத்துக்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோ கத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபையின் அதிகாரப் பிரதேசத்தில் காணப்பட்ட 08 சனசமூக நிலையங்களில் பலவருட காலமாக பராமரிப்பு அல்லது திருத்த வேலைகள் மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. | சனசமூக நிலையங்களின் திருத்த வேலை மேற்கொண்டு பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | சனசமூக நிலைய பராமரிப்பதற்கு மதிப்பீடுகள் தயாரிக்கப்படுகின்றது. |

## 4. கணக்களிப் பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோ கத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 06 செலவு விடயங்களுக்கான கூட்டுத்தொகை ரூபா 15,178,011 தொகைக்கான பாதீட்டு ஏற்பாடுகள் சேமிக்கப்பட்டிருந்தன. அவை 27 சதவீதம் முதல் 60 சதவீதம் வரை வீச்சில் காணப்பட்டது. | நடைமுறைச் சாத்தியமாக மதிப்பீடுகள் தயாரிக்கப்பட வேண்டும். | அடுத்த வருடம் இது தொடர்பாக கவனம் செலுத்துவேன். |
| (ஆ) | 04 வருமான விடயங்களில் பிரதிகூலமான முரண்களின் கூட்டுத் தொகை ரூபா 40,964,458 தொகை காணப்பட்டது. அவை 25 சதவீதம் முதல் 71 சதவீதம் வரை வீச்சில் இருந்தது. | நடைமுறைச் சாத்தியமாக மதிப்பீடுகள் தயாரிக்கப்பட வேண்டும். | அடுத்த வருடம் இது தொடர்பாக கவனம் செலுத்துவேன். |

**4.2 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சுற்றறிக்கையின் பிரகாரம் நடாத்தப்பட வேண்டிய கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக்கள் நடாத்தப் பட்டிருக்கவில்லை. | நிதிப் பிரமாணம் மற்றும் சுற்றறிக்கையின் பிரகாரம் செயற்பட வேண்டும். | எதிர்காலத்தில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |